08.10.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண்.114 /2016 ) திரு.வல்லத்தரசு.

4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) 1,2 தபசில் சொத்துக்களில் நான் அனுபவித்து வருவதை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டை எந்த வருடம் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் 1906 க்கு முன்பாக வாங்கினோம். அவ்வாறு கிரையம் பெற்ற 1906 ஆம் ஆண்டுக்கு முன்பு பெற்ற கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே பிரதிவாதிகளின் முன்னோர்கள் வீடு கட்டி குடியிருந்து வந்தார்கள் என்று சொன்னால் எங்கள் தாத்தா வீடு கட்டும் காலத்திலேயே பிரதிவாதிகளின் முன்னோர்களும் அதே காலத்தில் வீடு கட்டி இருந்து வருகிறார்கள். எங்கள் முன்னோர்கள் கிரையம் பெற்ற ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யாததால் சிறப்பு காரணம் உண்டா என்றால் காரணம் எதுவும் கிடையாது. தாவாச்சொத்தில் அனுபவிப்பதற்கு உரிமையுள்ளது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் அப்படி இல்லை. 5 ம்பிரதிவாதி உலகம்மாள் 3 ம்பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 6 ம்பிரதிவாதி 3,5 பிரதிவாதிகளின் மகள் என்றால் சரிதான். 1,2,3 பிரதிவாதிகளின் வகையறாக்கள் 1 ம்தபசிலுக்கு தெற்கு பக்கம் அடுத்து அடுத்து வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2 ம்பிரதிவாதி அவருடைய சகோதரர் காளிதாஸ், 1 ம்பிரதிவாதியும் டவுண் சர்வே எண்.33 ல் அடுத்து அடுத்து வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீட்டிற்கு எதிர்திசையில் எந்த திசையில் எங்கள் வீடு அமைந்துள்ளது என்றால் மேற்கு திசையில் வாசலும் மேற்கு திசை பார்த்து அமையப்பட்டுள்ளது.

2) 2 ம்பிரதிவாதியின் வீட்டிற்கு பின்பு 1 ம்பிரதிவாதி டவுண் சர்வே எண்.34 லும், 3,5,6 பிரதிவாதிகள் சர்வே எண்.36 ல் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 3 ம்பிரதிவாதி 5,6 பிரதிவாதிகள் அவர்களது வீட்டிற்கு பின்னர் காலியிடமாக டவுண் சர்வே எண்.37 ல் வைத்துள்ளார்கள் என்றால் தொழுவமாக வைத்துள்ளார்கள். டவுண் 37 ல் 3,5,6 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.14 முதல் 19 வரை மொத்தம் 4 வீடுகள் தனித்தனியாக கட்டியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு பின்னால் நல்லசிங்கம் முன்னால் இராணுவத்தினர் வீடு உள்ளது

என்றால் சரிதான். அவர் தபசில் சொத்து வழியாகத்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தபசில் சொத்துக்களில் நல்லசிங்கம் உரிமைகோரி எனக்கு ஆதரவாக இந்த வழக்கில் தரப்பினராக வரவில்லை என்றால் சரிதான். டவுண் சர்வே எண்.13 மேற்கு பக்கம் அப்பாசாமி மகன் சரவணன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சரவணன் வீடு சர்வே எண்.12 ல் இருந்து வருகிறதா அல்லது 13 ல் இருந்து வருகிறதா என்றால் 12 ல் இருந்துவருகிறது. அடுத்தார் போல் உள்ள டவுண் சர்வே எண்.11 ல் நடராஜன் குடியிருந்துவருகிறார் என்றால் சரவணனும்,நடராஜம் அண்ணன், தம்பிகள் ஆவார்கள். டவுண் சர்வே எண்.5 முதல் 10 வரையிலும் வீடு மற்றும் காலிமனையாக இருந்து வருகிறது என்றால் தவறு வீடு மட்டும் உள்ளது அதற்கு அடுத்து ரயில்வேக்கு பாத்தியப்பட்ட இடம். மேற்படி சர்வே எண் ரயில்வே தண்டவாளத்திற்கு தெற்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மாலாக தபசில் சொத்துக்கள் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்துக்கள் நான் சொல்லுவது போல் பொது தெரு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் 4 ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. 2 ம்பிரதிவாதி, அவருக்கு தெற்கே உள்ள காளிதாஸ் வீடு அவர்களுக்குப் பாத்தியப்பட்ட மேற்கே உள்ள தென்வடல் பாதை செல்கிறது என்றால் சரிதான். 1,2,3,5 பிரதிவாதிகள் அவர்கள் குடியிருக்கிற வீடுகளுக்கு செல்வதற்காக தென்வடல் பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல பயன்படுத்தவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு 8 வருடங்களுக்கு முன்பாக பொதுப்பாதையை ஆக்கிரமித்து விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1 ம்தபசில் சொத்தும் அதோடு சேர்ந்தனைந்த 2 ம்தபசில் சொத்தும் பிரதிவாதிகளின் முன்னோர்களான கோமதியம்மாளுக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.10.2025.